**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 207/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 2 |
| Name : | திருமதி. காஞ்சனா |
| Father's Name/Husband Name: | திரு. சதீஸ்குமார் |
| Village : | அணைக்கரை |
| Taluk : | கடலூர் |
| Age : | 29/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரியின் தரப்பில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இதற்கு முன்பு அ.சா.1 எனது உடன் பிறந்த அக்கா என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் எந்த தேதியில், எந்த இடத்தில், எத்தனை மணிக்கு என்னை விசாரணை செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சம்மந்தமாக போலீசார் சம்மன் கொடுத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சம்மன் எந்த தேதியில் பெற்றுக்கொண்டேன் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் எங்கு வைத்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அக்கா எதிரிகளின் வீட்டில் வாழும் போது அவருக்கு நடந்த கொடுமைப்பற்றி எந்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1–ஆன எனது அக்கா அவரின் இரண்டு பெண் குழந்தைகளை விட்டுவிட்டு எதிரிகளிடமே

விட்டுவிட்டு எனது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. இரண்டு பெண் குழந்தைகளும் 1ம் எதிரியிடம் பராமரிப்பில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு வழக்கு விவரம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் அ.சா.1 எனது அக்கா என்பதால் அவருக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது அக்கா சமரச மையத்தின் மூலம் 1ம் எதிரியுடன் சமரசமாகி 7 பவுன் நகை மற்றும் ஒரு லட்சம் பணம் பெற்றுக்கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நகை மற்றும் பணம் பெற்றுக்கொண்ட விவரம் தெரியும். ஆனால் சமாதானம் செய்வதாக கூறிய விவரம் எனக்கு தெரியாது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.